செ.வெ.எண்: 62 / ஜூலை /2020 நாள்: 19.07.2020

**திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் ஆவின் பால் மற்றும் பால் உபபொருட்கள் விற்பனையில் ஆர்வமுள்ளவர்கள் - மொத்த விற்பனையாளர் மற்றும் சில்லரை விற்பனையாளர் முகவர் உரிமம் பெற விண்ணப்பிக்கலாம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.சிவராசு.இ.ஆ.ப., அவர்கள் தகவல்.**

-----------------

திருச்சிராப்பள்ளி, பெரம்பலூர் மற்றும் அரியலூர் மாவட்டங்களில் தனியார் பாக்கெட் பாலினை விட குறைந்த விலையில் தரமான ஆவின் பால் பாக்கெட்டுகள், உபபொருட்கள் விற்பனையில் ஆர்வமுள்ளவர்களிடமிருந்து மொத்த விற்பனையாளர் மற்றும் சில்லரை விற்பனை முகவர்கள் கோரும் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. இது தொடர்பாக மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:

திருச்சிராப்பள்ளி மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியமான திருச்சி (ஆவின்) திருச்சி, பெரம்பலூர் மற்றும் அரியலூர் மாவட்டங்களை உள்ளடக்கியதாகும். இந்த மாவட்டங்களில் கிராமப்புற விவசாயிகளின் பொருளாதார மேம்பாட்டிற்காக அவர்கள் உற்பத்தி செய்யும் தரமான பாலை அரசு நிர்ணயித்த விலையில் கொள்முதல் செய்து பாலை பதப்படுத்தி தரமான பால் மற்றும் பால் உபபொருட்களை தயார் செய்து நுகர்வோருக்கு வழங்கி வருகிறது.

மேலும் ‘‘கொரோனா வைரஸ்’’ தாக்கத்தால் இந்திய அரசின் ஊரடங்கு உத்திரவு அமலில் உள்ள இக்கட்டான காலத்திலும் பிற தனியார் நிறுவனங்கள் பால் விநியோகத்தினை நிறுத்தியிருந்த வேலையிலும் ஆவின் நிறுவனம் நுகர்வோர்கள், குழந்தைகள், முதியோர்கள் மற்றும் அனைத்து தரப்பினருக்கும் கிடைக்கும் வகையில் தங்குதடையின்றி அனைத்து பகுதிகளிலும் முகவர்கள் மூலமாக விநியோகம் செய்துவருகிறது.

திருச்சி ஆவின் நிறுவனம், விவசாயிடமிருந்து கொள்முதல் செய்யப்பட்ட பாலிலிருந்து நிலைப்படுத்திய பால் (கொழுப்புச் சத்து 4.5% இதரசத்து 8..5%) , சமச்சீர் செய்யப்பட்ட நிலைப்படுத்திய பால் (கொழுப்புச் சத்து 4.5% இதரசத்து 8..5%) , நிறை கொழுப்புப்பால் (கொழுப்புச் சத்து 6% இதரசத்து 9%) மற்றும் சமன்படுத்தப்பட்டபால் (கொழுப்புச் சத்து 3.0% இதரசத்து 8..5%) ஆகிய வகைகளில் பேக்கிங் செய்து அனைத்து வகையான நுகர்வோரும் பயன் பெறுமாறு விற்பனைக்கு அனுப்பி வருகிறது. நகாப்புற முகவர்களுக்கு 6 சதவிகிதமும், திருச்சி மாவட்ட ஊரக பகுதிகள், பெரம்பலூர் மற்றும் அரியலூர் மாவட்ட அனைத்து பகுதிகளுக்கும் 7 சதவிகிதம் என்ற விகிதத்தில் மாதாந்திர பால் விற்பைனை கமிஷன் தொகை வழங்கப்படும். பால் உபபொருட்களுக்கு மொத்த விற்பனையாளர் மற்றும் விலலரை விற்பனையாளர்களுக்கு நிர்ணயம் செய்துள்ள நிகர லாபத்தில் விற்பனை செய்யலாம். சமீப காலத்தில் தனியார் பால் நிறுவனங்கள் தங்களது விற்பனை விலையினை லிட்டர் ஒன்றுக்கு ரூ.8/- வரை உயர்த்திய போதும், ஆவின் நிறுவனம் நுகர்வோர் நலன் கருதி பழைய விலையிலேயே நிலைப்படுத்திய பால் லிட்டர் ஒன்றுக்கு ரூ.46/-க்கும் சமச்சீர் செய்யப்பட்ட நிலைப்படுத்திய பால் லிட்டர் ஒன்றுக்கு ரூ.50/- க்கும் நிறை கொழுப்புப்பால் லிட்டர் ஒன்றுக்கு ரூ.52/- க்கும் மற்றும் சமன்படுத்தப்பட்டபால் லிட்டர் ஒன்றுக்கு

ரூ.43/-க்கும் விற்பனை செய்யப்படுகிறது. திருச்சி ஆவின் நிறுவனத்தின பால் மற்றும் பால் உபபொருட்களை மேற்குறிப்பிட்ட கமிஷன் அடிப்படையில் விற்பனை செய்திட ஒரு தாலுக்காவிற்கு ஒரு மொத்த விற்பனையாளரும், அனைத்து மாவட்ட பகுதிகளிலும் சில்லரை விற்பனை முகவர்களும் நியமிக்கப்பட உள்ளனர்.

திருச்சி, பெரம்பலூர் மற்றும் அரியலூர் மாவட்ட பகுதிகளில் சொந்தமாகவோ(அ) வாடகை கடையோ வைத்துள்ள பால் மற்றும் பால் உபபொருட்கள் விற்பனையில் ஆர்வமுள்ளவர்களிடமிருந்து மொத்த விற்பனையாளர் மற்றும் சில்லரை விற்பனை முகவர்கள் கோரும் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. விருப்பமுள்ளவர்கள் ஆவின் நிறுவனத்தின் தொலைபேசி எண்: 0431 2333001 அலைபேசி எண்: 9942357209 9994314559, 9543755850 9789350372, 9659843553 ஆகிய எண்களை தொடர்பு கொள்ளலாம் இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.சிவராசு.இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு :**

**செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,**
**திருச்சிராப்பள்ளி.**